DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **STC.No.188/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : மருதுபாண்டியன் (Pw.4)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of March 2026

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது ).

**முதல் விசாரணை –**

நான் வந்தவாசலில் குடியிருந்து வருகிறேன். நான் தனியாரில் வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை 2024ம் வருடம் ஆவாரங்குளத்தில் உள்ள காய்கறி தொடர்பான நிறுவனத்தில் பணிபுரிந்தபோது முக்குளம் போலிசார் எனது நிறுவனத்திற்கு வந்து எனது நிறுவனத்தில் இருந்து ஒரு கிமீ தொலைவில் உள்ள கல்குவாரியில் என்ன நடந்தது என்று கேட்டார்கள். அப்போது என்னிடம்

பிரச்சனை நடந்ததாக கூறினார்கள், நான் நேரில் பார்க்கவில்லை என்று கூறினேன். போலிசார் சம்பவம் நடைபெற்றதற்காக என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். (**அந்த பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள். .

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 24.04.2023ம் தேதி மாலை 6மணியளவில் நானும், செம்மண் குவாரியில் வேலை செய்யும் கட்டலாங்குளத்தைச் சேர்ந்த சத்தியேந்திரன் என்பவரும் ஆவாரங்குளத்தில் உள்ள Sun – O2 – Farm செம்மண் குவாரியில் பேசிக் கொண்டிருந்தபோது முக்குளம் காவல் நிலைய போலிசார் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அதில் நானும் சத்தியேந்திரன் என்பவரும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.